செயற்பொறியாளர் அலுவலகம், பொ.ப.து., கட்டட கட்டுமான கோட்டம்–3,
மருத்துவப் பணிகள், சேப்பாக்கம், சென்னை–5.

முன்னிலை – திரு.எம்.வாசுதேவன், எம்.இ.,
செயற்பொறியாளர், பொ.ப.து.,

செ.மு.ஆ.எண். நிஎ1 / கோ.565–2/ 2021 / நாள். 19.07.2021

பொருள் : பணியமைப்பு – பொ.ப.து. – த.நா.அ.ப.தொகுதி – செல்வி.கு.ஜனனி, இளநிலை உதவியாளர் (பிறந்த தேதி – 19.11.1993) – பணிவரன்முறை மற்றும் தகுதிகாண்பருவம் துவக்கி ஆணை வழங்குதல் – குறித்து.

பார்வை :
1. செயலாளர், தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம், சென்னை கடித எண் 2496/ PSD–I/2020/நாள் 29.05.2020.
2. முதன்மைத் தலைமைப் பொறியாளர், நீர்வள ஆதார துறை (ம) தலைமைப் பொறியாளர் (பொது), பொதுப்பணித்துறை, சென்னை–5, அவர்களின் செயல்முறை ஆணை எண் எஸ் 3 (3) 35935/2020/ நாள் 17.09.2020.
3. இவ்வலுவலக செ.மு.ஆ.எண்.நிஎ1 / கோ.565/ 2020 / நாள் 19.09.2020.
4. அரசு ஆணை எண்.129 / ப(ம) நி.சீ.துறை / நாள் 17.04.1986.

-----

தமிழ்நாடு அரசு பணியாளர் தேர்வாணையத்தால் நடத்தப்பட்ட போட்டி தேர்வு 2018–2019 மற்றும் 2019–2020 ஆண்டுக்களுக்கான ஒருங்கிணைந்த குடிமைப்பணிகளுக்கான தொகுதி–4–ல் இளநிலை உதவியாளராக தெரிவு செய்யப்பட்டு பார்வையில் காணும் செயல்முறை ஆணைகளின்படி செல்வி.கு.ஜனனி அவர்கள் இளநிலை உதவியாளராக இக்கோட்டத்தில் 30.09.2020 முற்பகல் பணியேற்றார்.

இதனைத் தொடர்ந்து தமிழ்நாடு மாநில மற்றும் சார்நிலை அலுவலர்களுக்கான பணிவிதி 23(a) (i)–ன்படி செல்வி.கு.ஜனனி அவர்கள் பணியில் சேர்ந்த நாளான 30.09.2020 முற்பகல் முதல் இளநிலை உதவியாளர் பதவியில் பணிவரன்முறை செய்து ஆணை வழங்கப்படுகிறது.

எனவே, செல்வி.கு.ஜனனி அவர்களுக்கு இளநிலை உதவியாளர் பதவியில் பணிவரன்முறை செய்வதைத் தொடர்ந்து பார்வை (4)–ல் காணும் அரசு ஆணையின்படி 30.09.2020 முதல் தனியரின் தகுதிகாண்பருவம் துவக்கி ஆணை வழங்கப்படுகிறது. மேலும், தனியர் தமது மூன்றாண்டு கால தொடர்பணியில் இரண்டு ஆண்டுகால தகுதிகாண்பருவத்தை நிறைவு செய்ய வேண்டும் எனவும், இப்பதவிக்கென நிர்ணயிக்கப்பட்ட பவானிசாகர் அடிப்படை பயிற்சியினை நிறைவு செய்ய வேண்டுமெனவும் தெரிவித்துக் கொள்ளப்படுகிறது.

தகுதிகாண்பருவ காலத்தில் தற்செயல் விடுப்பு தவிர்த்து ஏனைய பிற விடுப்புகள் துய்த்தால் தகுதிகாண்பருவம் தள்ளிப் போகும் என்று தெரிவித்துக் கொள்ளப்படுகிறது.

19/7/21

செயற்பொறியாளர், பொ.ப.து.,
கட்டட கட்டுமான கோட்டம்–3,
மருத்துவப் பணிகள்,
சேப்பாக்கம், சென்னை–5.

19.7.21

பெறுநர்
செல்வி.கு.ஜனனி, இளநிலை உதவியாளர்
கோட்ட அலுவலகம்.